# நெகிழியின் தாக்கம்

TAM205A

(ஆதாரம்: https://www.youtube.com/watch?v=73sGgmZoMBQ&feature=youtu.be)

**வகுப்பு 4** **பாடம்: ஒளிமயமான எதிர்காலம்**




நாம் பொருட்கள் வாங்க கடைக்குச் செல்லும் போது கையில் துணிப்பைகளை எடுத்துச் செல்வதில்லை

அதனால் நமது வீடுகளில் நெகிழிப் பைகள் அதிகமாக இருக்கின்றன.






பல்வேறு நெகிழிப் பொருட்களால் இந்த பூமியின் வளங்கள் அதிகமாகச் சீரழிக்கப்பட்டுள்ளன.

நாம் தூக்கி எறியும் நெகிழிப் பொருட்களை உணவு என்று நினைத்து விலங்குகளும் பறவைகளும் விழுங்கிவிடுவதால் இறந்து விடுகின்றன.





நெகிழிக் கழிவுகளால் நிலம் மட்டுமல்லாது கடலும் மாசுபடுவதால் கடல்வாழ் உயிரினங்கள் அவற்றை உணவென்று நினைத்து விழுங்கிவிடுகின்றன.

பல்வேறு நெகிழிப் பொருள்களை விழுங்கும் மீன்கள் பாதிக்கப்படுவதோடு மட்டுமல்லாது, அம்மீன்களைக் கப்பல்கள் மூலம் பிடித்து நாமும் உண்பதால் நாமும் பாதிக்கப்படுவோம்.





நீர், நிலம், வாயு என வேறுபாடில்லாது உலகம்
முழுவதும் சுற்றுச்சூழல் சீர்கேட்டை ஏற்படுத்தி வரும்
நெகிழியைப் பயன்படுத்துவதைத் தவிர்ப்போம்.
துணிப்பைகளையும், இயற்கையால் ஆன வேறு
பொருட்களையும் உபயோகிப்போம்

**மாணவர்களுக்கான செயல்திட்டங்கள்:**

1. மக்கும் குப்பைகள் , மக்காத குப்பைகள் என குப்பைகள் ஊர்/நகர்ப் புறங்களில் எவ்வாறு பிரித்தெடுக்கப்படுகின்றன என்பதை மாணவர்களை உற்றுக்கவனிக்கச் சொல்லி ஒரு கட்டுரை எழுதச்செய்யவும்.

2. கடைகளில் பயன்படுத்தப்படும் பல்வேறு தரத்திலான நெகிழிப்பைகளை மாணவர்களைச் சேகரித்து வரச் சொல்லி அவற்றிற்கிடையேயான வேறுபாடுகளை வகுப்பில் விளக்கி மாணவர்களையும் உரையாடலில் கலந்து கொள்ளச்செய்யவும்.

3. மாணவர்களை நெகிழிப் பைகளால் ஏற்படும் தீமைகள் குறித்து விளக்கும் அரசு/தனியார் விளம்பரச் சுவரொட்டிகள் மற்றும் அறிக்கைகளை சேகரிக்கச் செய்து வகுப்பில் தோரணமாகத் தொங்க விடவும்.